1979 மார்ச் 15]

திரு. இ. தமிழரசன் : தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி கோவை மாவட்டத்தைச் சேர்ந்ததாக இருந்தாலும், கடந்த புயல் வெள்ளத்தின் போது வாணியம்பாடியில் திடீரென்று வெள்ளம் இரவு நேரத்தில் வந்ததால், 7–8 பேர் உயிர் இழந்தார்கள். அந்த 7–8 பேர் குடும்பத்திற்கு உதவி கொடுக்கப் பட்டதா? டெம்பரரியாகக் கொடுக்கப்பட்ட இடத்தில் இருந்து அவர்களுக்கு நிரந்தர இட வசதி செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, வாணியம்பாடி பற்றிய தகவல் பூராவும் என்னிடத்தில் இல்லாவிட்டாலும், அதில் இருக்கும் சங்கடங்களை இங்கே சொல்வதற்குக் காரணம், இங்கே இருக்கும் மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்துழைப்பார்கள் என்று எண்ணத்தில் தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். குடிசைகள் போடுகிறபோது தாழ்வான இடத்தில், ஆற்றின் பள்ளமான இடத்தில் போட்டு விடுகிறார்கள். வெள்ளம் வருகிறபோது அது முழுகாமல் எப்படி இருக்கும். உடனே எல்லோரும் வந்து உதவி செய்யவேண்டும் என்று சொல்கிறார்கள். ஆகவே, நான் அனைவரையும் கேட்டுக்கொள்வது, குடிசைகள் போடும்போது ஆற்றின் பள்ளத்தில் போடாமல், அந்த வகையில் அரசுக்கு உதவி செய்யவேண்டும். சமுதாயத்திற்கு உதவி செய்ய வேண்டும். இன்று வாணியம்பாடியில் நடந்ததையெல்லாம் நேரில் பார்த்தவர்கள்கூட அந்த ஆற்றுப் பள்ளத்தில் புதிதாக குடிசை போட்டு இருக்கிறார்கள். அங்கே அவ்வளவு பேர் உயிர் சேதம் அடைந்ததைப் பார்த்தவர்கள்கூட, அந்தச் சங்கடங்களை எல்லாம் நேரில் தெரிந்தவர்கள்கூட அப்படி செய்து இருக்கிறார்கள். வேறு இடத்தில் போடுவார்கள் என்று சொன்னால் 2 பர்லாங்கு, 3 பர்லாங்கு தூரம் இருக்கிறது என்று சொல்கிறார்கள். இந்தக் காலத்தில் 2 பர்லாங்கு, 3 பர்லாங்கு நடப்பது ஒன்றும் கஷ்டம் இல்லை. இதை இங்கே நான் சொல்வதற்குக் காரணம், தமிழகம் பூராவும் இருக்கும் பொது மக்களோடு தொடர்புள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த அரசுக்கும், சமுதாயத்திற்கும் உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 404–405 ஒன்றாக எடுத்துக்கொள்ளலாம்.

அறநிலையக் கட்டட வாடகைதாரர்கள்.

*வினா எண். 404—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாடு அறநிலையக் கட்டிட வாடகைதாரர் சங்கத்தின் 25-9-1977 மாநில மாநாட்டு தீர்மானங்கள் அரசுக்கு வந்துள்ளதா?

[1979 மார்ச் 15

(ஆ) அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :

(அ) ஆம்.

(ஆ) ஓர் விவர அறிக்கை * அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

*வினா எண்.405— திரு. கு. ரமணி : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) இந்து அறநிலைய ஆட்சித்துறையினர் நியாய வாடகைக்குழு ஒன்றை அமைத்து கோவில்களில் உள்ள கடைகள், கட்டிடங்கள், வீடுகளுக்கு வாடகை உயர்த்தப்பட்டது உண்டா?

(ஆ) ஆம் எனில், அந்த வாடகை உயர்வு முன் இருந்ததைவிட எவ்வளவு உயர்த்தப்பட்டது?

(இ) இந்த வாடகை உயர்வு என்ன அடிப்படையில் செய்யப்பட்டது.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :

(அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ) பொதுப்பணித்துறை பின்பற்றும் விதிமுறைகளின் அடிப்படையில் நியாய வாடகைக் குழுவால் ஒவ்வொரு கட்டிடத்திற்கும், ஊர், இடம் உபயோகம் இவைகளுக்கேற்றவாறு நிர்ணயிக்கப்படுகிறது. முன்பு இருந்த வாடகையை விட, சுமார்அரை பங்கு முதல் $1\frac{1}{2}$ பங்குக்கு மேல் போகாமல் வாடகை உயர்வு செய்யப்படுகிறது.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறநிலையத் துறையைச் சேர்ந்த இடங்களில் கட்டிடங்கள் கட்டிக்கொண்டும், கோவிலுக்குச் சொந்தமான இடங்களில் வியாபாரம் செய்யும் சிறு வியாபாரிகளுக்கு பல மடங்கு வாடகை விதிக்கப்பட்டு, நிர்பந்தமான முறையில் வசூலிக்கப்படுவதாக கூறப்படுகிறது. அந்த கோவில் நிலையங்களும் ரென்ட் கன்டிரோல் ஆக்டின் கீழ் கொண்டு வர அரசு நடவடிக்கை எடுக்குமா? கோவில்களுக்கும், கடவுள்களுக்கும் ரென்ட் கன்டிரோல் ஆக்ட் பொருந்தும் என்று அமைச்சர் அறிவிப்பார்களா என்று என் முதல் கேள்வி மூலமாக அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

[* 251 ஆம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப் பெற்றுள்ளது.]